6. அறிவிப்பு.

1989-90 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை அவையில் அளிக்கும் நாள்.

13–35 மணி

[மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1989–90 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் குறித்த அறிக்கையைப் பேரவையில் அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1990 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 23 ஆம் நாள் செவ்வாய்க் கிழமை என்று குறித்துள்ளார்கள்.

பேரவையின் இன்றைய நிகச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் 22—1—1990 திங்கட்கிழமை காலை 9–00 மணிக்குக்கூடும்.

பின்னர் பேரவை 13–35 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

35. ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 30—6—1971 ஆம் நாளிட்ட II (2)/117(யு)/1971 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம்-குடிநீர் வழங்கல் துறையின் 6—7—1989 ஆம் நாளிட்ட 413 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

36. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 29—7—1989 ஆம் நாளிட்ட 1211-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

37. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுவிலக்கு (மேல் முறையீடு மற்றும் மறு ஆய்வு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 31—8—1989 ஆம் நாளிட்ட 981 ஆம் எண் அரசாணையில்